**மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம் - 2023**
---------------------------------------------------------------------------------------------

மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு செயற்திட்ட நிர்வாக கைநூலின் V (D) ஆம் பிரிவு மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் (CEB) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3585- எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. (அ) காற்றலை மின்வலு உருவாக்கல் அதிகரிபத்தல், (ஆ) மீள்சுழற்சி மின்வலு முகாமைத்துவ முறைமை முன்னேற்றம், (இ) செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வையில் கடன் பெறுபவரின் இயலளவை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,923.06 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 256.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,104.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,818.22 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 56.70 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2019 மார்ச் 04 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|
| CEB இற்கு காற்றலை மின் நிலையம் கையளிக்கப்பட்டு தொடங்கிய பின்னர் 2021 நவம்பர் மாதத்தில் நான்கு சேதமடைந்த நாற்று மேடைகளின் மீளமைத்தலிற்றகாக CEB ஆல் ரூபா 1,024.1 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், CEB இன் நிதிக்ற்றுக்களில் மேற்குறித்த மீளமைப்பு கிரயத்தை சீராக்காமல் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இடி மின்னல் ஏற்பட்டமையால் நான்கு சேதமடைந்த நாற்று மேடைகளின் மீளமமைத்தல் கிரயமான ஐ.அ.டொலர் 3,025,406 இற்கு சமமான தொகை EPC ஒப்பந்தகாரருக்கு இறுதி பிடிகாசு கொடுப்பனவிலிருந்து பிடித்து வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதான படையணி நிலகள் இடிமின்னலில் உள்ளதென கவனத்திற்கொள்ள வேண்டியிருந்தது. CEB ஆனது காப்றுதியையோ அல்லது வேறு ஏதாவதையே செலுத்த வேண்டியிருந்தது. காற்றலை நிலை செயற்பாட்டு காலத்தின் பொது நாற்று மேடைகள் சேதமடைந்ததென ஒப்பந்தகாரர் உறுதிப்படுத்தியிருப்பின் CEB அனது இந்த தகராறு இன்னமும் இருந்ததுடன் பிரச்சனை நிலுவையிலுள்ளது. எனவே, நிறுவனம் தீர்வு காணப்பட்டுடிருந்த சொல்லப்பட்ட தொகை இன்னமும் WIP இன் கீழ் இருந்தது. | CEB இற்கு சொத்துக்களை கையனிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட மூலதனச் செலவினம் CEB இன் புத்தகங்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட நிர்வாக கைநூலின் V C (31) ஆம் பிரிவு | செயற்திட்ட கைநூலின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பட்ட சகல செலவினங்களும் நிதியளிக்கின்ற வளங்கலால் (GOSL மற்றும் ADB) புறம்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். எவ்வாறாயினும், | மன்னார் காற்றலை மின்சக்தி செயற்திட்டத்திற்காக தனியான செலனிக் தலைப்பு பேணப்பட்டது. செயற்திட்டத்திற்காக தனியான பரீட்சை மீதியை | கைநூலில் வேண்டப்பட்டவாறு தனித்தனி காசுப் புத்தகம் பேணப்பட வெண்டும். |

| | |
|---|---|
| புறம்பான காசுப் புத்தகம் பேணுவதற்கு பதிலாக செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட பிரிவு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை பதிவதற்காக இந்த செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட பிரிவிற்காக பொதுவான காசுப் புத்தகம் பேணப்பட்டிருந்தது.. மேலும், CEB பங்களிப்பு மீதி CEB பங்களிப்பிற்காக தனித்தனியாக செலவினங்கள் காட்டுவதன் மூலம் தனியான பேரேட்டுக் கணக்கு பேணப்படாமல் நிதிக்கூற்றுக்களின் 13 ஆம் குறிப்பின் கணப்பீட்டின் அடிப்படையில் நிதி நிலைமை கூற்றுக்கு எடுக்கப்பட்டிரந்தது. | தயாரிக்கும் நோக்கத்திற்காக புறப்பான கணக்குப் புத்தகம் மற்றும் பதிவேடுகள் என்பன பேணப்பட்டிருந்தது. உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு மத்தியப்படுத்தப்பட்ட காசுப் புத்தகம் பேணப்பட்டுள்ள அதேநேரம் சகல சம்பந்தப்பட்ட பெறுவனவகள் மற்றும் கொடுப்பனவுகள் ஏற்படக்கூடிய தடங்கல்களை தவிர்க்கும் நோக்கில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ஒவ்வொரு செயற்திட்டத்தற்கு மாற்றப்பட்டிருந்தது. |

**3. காணிச் சுவீகரிப்பு தொடர்பான பிரச்சனைகள்**

| **காணித் துண்டுகளின் எண்ணிக்கை** | | | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **சுவீகரிக்க வேண்டுமென எதிர்பாரக்கப்பட்டவை** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்ப்டவை** | **உரிமையாண்மை மாற்றப்பட்டவை** | | |
| சுவீகரிக்கப்பட்ட காணி - WTG இடங்கள் (38), நுழைவு வீதிகள் (7) மற்றும் தங்கியிருக்கும் இடங்கள் (1) | சுவீகரிக்கப்பட்டது (38a கட்டளையால் உடமையாக்கல்) | 57 துணைத் துண்டுகளிற்காக உடமையாக்கல் கட்டளை சான்றிதழ் பெறப்பட்டிக்கவில்லை | காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச செயலாளரால் (மன்னார் நகர) காணிச் சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்ட ள்ளதுடன் மீதிச் செயற்பாடுகள் இன்னமும் நடைமுறையில் உள்ளன. | எதிர்காலத்தில் இடர்களை தவிர்ப்பதற்கு உடனடியாக காணிகளின் உடமையாக்கல் சானிறிதழை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |